சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி

புதுப்பாக்கம்

ஐந்தாம் ஆண்டு "அ பிரிவு (A SECTION)- மாதிரி நீதிமன்றம்

## நிபந்தனைகள்:

1. அரசியலமைப்பு, உரிமையியல் மற்றும் குற்றவியல் சம்மந்தபட்ட மூன்று வழக்கின் பொருண்மைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவரும் மூன்று வழக்குகளுக்கும் வாதுரைகளைத் தனித்தனியாக எழுதி அல்லது தட்டச்சு செய்து ஒன்றாக சுழல் பிணைப்பு(SPIRAL BINDING) (மூன்றையும் சேர்த்து) செய்து கொடுக்க வேண்டும்.

2. மூன்று வழக்குகளிலும் ஏதேனும் ஒரு தரப்பினருக்கு வாதுரை தயார் செய்தால் போதுமானது.

உங்கள் கல்லூரி பதிவெண் ஒற்றைப்படை எண்ணாக முடியும்பட்சத்தில் மேல்முறையீட்டாளருக்கும், வாதிக்கும்,மனுதாரருக்கும். (நீல நிறத்தில் )

இரட்டைப்படை எண்ணாக முடியும்பட்சத்தில் பிரதிவாதிக்கும், எதிர்மனுதாரருக்கும் வாதுரையினை சமர்ப்பித்தால் போதுமானது.(சிவப்பு நிறத்தில்)

3. ஒவ்வொரு பொருண்மைக்கும் மூன்று எழுவினாக்களை (ISSUES) தயார் செய்ய வேண்டும். மூன்று பொருண்மைக்கும் ஒன்பது எழுவினாக்கள் எழுதி அல்லது தட்டச்சு செய்திருக்க வேண்டும். எழுவினாக்களை நீங்களே பொருண்மைகளிலிருந்து தயார் செய்து கொள்ளலாம்.

4. மூன்று வாதுரையிலும் கீழ்கண்டவை கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும்:

அட்டைப்பக்கம்

வழக்கின் பட்டியல்

சொற்றொடரின் சுருக்கப்பட்டியல்

நீதிமன்ற ஆள்வரம்பு

எழுவினாக்கள்

சுருக்க வாதுரை

விரிவான வாதுரை

இரைஞ்சுதல்

5. ஒரு பக்கம் மட்டுமே எழுதி அல்லது தட்டச்சு செய்திருக்க வேண்டும்.

6. கல்லூரி திறக்கும் நாளன்று மூன்று வாதுரைகளையும் சேர்த்து ஒரு சுழல் பிணைப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

# அரசியலமைப்பு வழக்கு

பாசியா கண்டத்தில் ஒரு நாடு "சிந்தியா" வாகும். சிந்தியாவில் 28 மாநிலங்கள் 8 யூனியன் பிரதேசங்கள் இருக்கின்றன. உலகளவில் இரண்டாவது மக்கள் தொகைக் கொண்ட நாடான சிந்தியாவில் மக்களாட்சி சிறந்தமுறையில் நடைபெற்றுவருகிறது. ஆங்கிலேயர்களிடம் 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்னர் சமூக பொருளாதார அரசியல் நீதி அனைத்து சிந்திய மக்களுக்கும் கிடைக்கும் பொருட்டு பல சட்டங்களை இயற்றி மக்களை ஆட்சி செய்து வருகின்றனர் 5 வருடத்திற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியாளர்கள். சிந்தியா பல்வேறு மதம், இனம் கலாச்சாரத்தைப் பின்பற்றும் மக்கள் வசிக்கின்ற பன்மைத்துவம் வாய்ந்த நாடாகும். இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையானவர்களாகவும் இஸ்லாம், கிறிஸ்துவ, சமணம், பவுத்தம் மற்றும் பார்சி மதத்தைச் சார்ந்தவர்கள் சிறுபான்மையானவர்களாகவும் வசித்து வருகின்றனர்.

"சரளம்" என்பது தென்சிந்தியாவில் இருக்கும் ஒரு மாநிலமாகும். பெண்வழியினைக் பின்பற்றும் பாரம்பரியத்தைக் கொண்ட சரளத்தில் புகழ்வாய்ந்த இந்துக்கோயிலான "கபாரிமலை" இருக்கின்றது. கபாரிமலை என்பது உலகளவில் சிறப்பு வாய்ந்த கோயிலாகும். கார்த்திகை, மார்கழி மற்றும் தை மாதங்களில் சரளம் மட்டுமின்றி சிந்தியாவின் மற்ற மாநிலங்களிலிருந்தும் பல லட்சக்கணக்கான இந்துமதத்தைச் சார்ந்த ஆண்பக்தர்களும்,10 வயதுக்குட்பட்ட மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட பெண் பக்தர்களும் மாதக்கணக்கில் கடுமையான விரதமிருந்து கபாரிமலைக்கு வந்து இறைவனை தரிசித்து வருகின்றனர்.அக்கோவிலுக்குள் 10 முதல் 50 வயதிலான பெண்களை அனுமதிப்பதில்லை என்பதனை வழிபாட்டு பழக்கமாகவே பலநூறு ஆண்டுகளாகக் கொண்டுள்ளனர் அக்கோயிலினை நிர்வகிப்பவர்கள். அதற்கு பெண்களுக்கு ஏற்படும் உடல் மாற்றமான மாதவிடாய் என்பதே முக்கியக் காரணமாகக் கொள்ளப்படுகிறது.

இந்த பழக்கத்தினை எதிர்த்து 1990 ஆம் ஆண்டு சரள மாநிலத்தின் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படுகிறது. 1991 ஆம் ஆண்டு சரள மாநில உயர்நீதிமன்றம் வயதினை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்பட்ட தடையானது சரியே என்று தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பினை எதிர்த்து 2006 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்சநீதிமன்றத்தில் இவ்வழக்கானது அரசியலமைப்பு அமர்வுக்கு 2017 ஆம் ஆண்டு மாற்றப்பட்டு, 2018 செப்டம்பரில் அனைத்து வயது பெண்களையும் கபாரிமலைக் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பினை மறு ஆய்வு செய்யக்கோரி தற்போது மறு ஆய்வு மனுவானது உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றம் இவ்வழக்கினை மறு ஆய்வு செய்யும் பொழுதே இவ்வழக்கினை ஒத்த பார்சி மதப்பெண்களை பார்சி நெருப்புக் கோவிலுக்குள் அனுமதிக்காதது, பர்னாடகா மாநிலத்தில் குக்கி சுப்ரமணியசாமி கோவிலுக்குள் பழக்கத்தில் இருக்கும் "மடசேனா" பழக்கம், கஜராத் மாநிலத்தில் உள்ள போரா முஸ்லிம் பெண்களுக்கு எதிரான பழக்கங்கள் என அனைத்து மத உரிமை சம்மந்தபட்ட வழக்குகளுக்கும் தீர்வு காணும் பொருட்டு அதிகமான நீதிபதிகளைக்கொண்ட அமர்வினை உருவாக்கியுள்ளது.

(குறிப்பு: இந்திய நாட்டின் சட்டங்கள் அனைத்தும் சிந்தியா நாட்டிற்கும் பொருந்தும்)

# உரிமையியல் வழக்கு

எல் அன் கே" என்ற பொது அளவரையுடைய நிறுவனத்திற்கு எழுத்து மூலமான ஒப்பந்தத்தின்மூலம் கண்ணன் என்பவரை முதுநிலை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அந்த ஒப்பந்தத்தின்படி மாதத்திற்கு 17 லட்சம் என்ற சம்பளத்தில் கண்ணன் 2 வருட காலம் பணிபுரிய வேண்டும். இடைப்பட்ட காலத்தில் அவர் வேலையை விட்டு நின்றுவிட்டால் 6 மாதச் சம்பளத் தொகையினை “எல் அன் கே" நிறுவனத்திற்கு கொடுக்க வேண்டும். அந்த ஒப்பந்ததின்படி கெடுவிற்குள் "எல் அன் கே" நிறுவனம் கண்ணனை வேலையைவிட்டு நிறுத்திவிட்டாள் 3 மாதம் நோட்டிஸ் அல்லது மூன்று மாதம் சம்பளம் கண்ணனுக்குக் கொடுக்க வேண்டும். ஒரு வருடத்தில் காரணமின்றி கண்ணன் வேலையைவிட்டு நின்றுவிட்டார். ஆகையால் ஒப்பந்தப்படி "எல் அன் கே" நிறுவனம் ஆறு மாத சம்பளத்தினைக் கோரியுள்ளனர். கண்ணன் தான் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்த போதிலும் அது ஒருதலைப்பட்ட(One Sided) ஒப்பந்தம் என்றும் அவர் பணியிலிருந்து நின்றுவிட்டதால் அந்நிறுவனத்திற்கு எந்தவொரு இடையூறும் இல்லையென்றும் தான் தொகை ஏதும் கொடுக்க வேண்டியதில்லை என்றும் வாதிடுகிறார்.

ஆதலால் நிறுவனமானது உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது.

(குறிப்பு: இந்திய நாட்டின் அனைத்து சட்டங்களும் இவ்வழக்கிற்கு பொருந்தும்)

# <u>குற்றவியல் வழக்கு</u>

சரவணன் என்பவர் காஞ்சியில் "நளன் உணவகம்" என்ற உணவகத்தை நடத்தி வந்தார். உணவகமானது நல்ல லாபகரமானதாகவும் தினமும் இரவு 9.00 மணி வரையிலும் அதிகமாக வாடிக்கையாளர்கள் வந்து செல்லும் வகையிலும் இருந்தது. வசந்தன், அமுதன் மற்றும் நிலவன் என்ற மூன்று நபர்களும் அவ்வுணவகத்தில் வேலை செய்து வந்தனர். அவ்வுணவகத்தின் அருகிலேயே கணேசன் என்ற நபர் "அட்சயா உணவகம்" என்பதனை நடத்தி வந்தார். சரவணன் மற்றும் கணேசன் இருவருக்கும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது. அந்த முன்விரோதம் காரணமாக சரவணன், வசந்தன், அமுதன் மற்றும் நிலவன் 20-01-2019 அன்று 6 மணியளவில் சதித்திட்டம் தீட்டினர். 25-01-2019 அன்று வழக்கத்திற்கு மாறாக ஆறுமணிக்கே உணவகத்தினை சாத்திவிட்டு முன்கூட்டியே தீட்டிவைத்த சதித்திட்டத்தின்படி 25-01-2019 தேதியன்று மாலை 7 மணியளவில் கணேசன் வரும் வழியில் அனைவரும் ஒரு பொதுவான உட்கருத்துடன் காத்திருந்தனர். அன்றைக்கு மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த கணேசனை வழிமறித்து நிறுத்தினர். சரவணன் தன்னிடம் இருந்த உரிமையில்லாதக் கைத்துப்பாக்கியால் கணேசனின் இடுப்பில் "இத்துடன் தொலைந்து போடா!" என்று கூறிக்கொண்டே சுட்டார். இச்சம்பவத்தினை அவ்வழியே வந்த ஒருவர் பார்த்தார். உடனே சரவணன், வசந்தன், அமுதன் மற்றும் நிலவன் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டனர். குண்டடிபட்டுக் கிடந்த கணேசனை சாட்சியானவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தார். பத்து நாட்கள் தீவிர சிகிச்சை அளித்தும் சிகிச்சைப்பலனின்றி கணேசன் இறந்துவிட்டார்.

காஞ்சி காவலர்கள் வழக்கினை பதிவுசெய்து சாட்சியினை விசாரித்து அந்நால்வரையும் கைது செய்தனர்.கொலை ஆயுதமான கைத்துப்பாக்கியினை காவலர்களால் கண்டெடுக்க முடியவில்லை.

கொலை செய்யப்பட்டவருக்கும் கொலையானவருக்கும் இருந்த பகை நன்கறிந்தும் அதனை நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லையென்றும் இருந்த ஒரு சாட்சியும் பிறழ் சாட்சியாக மாறியமையாலும் கீழமை நீதிமன்றம் கொலையாளிகளை விடுவித்துவிட்டது.

அந்நால்வரின் விடுதலையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

<u>(குறிப்பு: இந்திய நாட்டின் அனைத்து சட்டங்களும் இவ்வழக்கிற்கு பொருந்தும்)</u>